ஜானி ஆப்பிள் விதைகளை விதைத்தார்



ஆசிரியர்

பேட்ஸி ஜென்ஸன்

வரைபடம்

பேட் ஹாகன்

மொழி பெயர்ப்பு

அனுமிதா

ஜானி ஆப்பிள் விதைகளை விதைத்தார்



ஜானி ஆப்பிள்சீட் ஆமெரிக்காவின் பாரம்பரிய வரலாற்றில் உள்ள ஒரு கதாபாத்திரம் இல்லை. பல வருடங்களுக்கு முன்பு அங்கு வாழ்ந்து வந்த ஒரு மனிதர். ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்கா முழுவதும் ஆப்பிள் மரங்களை நட்டதால் ஜானி ஆப்பிள்சீட் என்கிற புனை பெயரைப் பெற்றார்.

அவரது கதை மிகவும் தனித்துவமானது மட்டுமல்லாமல் சுவாரஸ்யமானதும் கூட; ஆனால் காலப்போக்கில் கதையில் பல விஷயங்கள் மிகைப்படுத்தியுள்ளன. சில விஷயங்கள் ஒரு போதும் நடக்கவில்லை. ஆனால் ஜானி மக்களை மட்டுமல்ல, விலங்குகளையும் நேசித்தார் என்பது உண்மைதான்; அமெரிக்காவின் கரடுமுரடான மற்றும் வனாந்திர இடங்களை அவர் மிகவும் விரும்பினார்.

ஜானியின் உண்மையான பெயர் ஜான் சேப்மேன். அவர் எங்கு சென்றாலும் ஆப்பிள் விதைகளை விதைப்பார். அதனால் ஆப்பிள்சீட் என்ற பெயரால் அழைக்கப்பட்டார்.



செப்டம்பர் 26, 1774 அன்று மாசசூசெட்ஸில் ஜானி பிறந்தார். இவரது தந்தை விவசாயி. தந்தைக்கு விவசாயத்தில் உதவுவது அவருக்குப் பிடித்த வேலை.



அவருக்கு மிகவும் பிரியமான வேலை ஆப்பிள் பழத்தோட்டங்களைக் கவனித்துக் கொள்வது . அந்த மரத்தின் மேல் ஏறி பளபளப்பான சிவப்பு ஆப்பிள்களை மிக்க ஆவலுடன் பறிப்பார்.




ஜானி இளைஞராக இருந்த போது சில மற்றும் தொலை தூரம் இருந்த இடங்களுக்குச் முன்னோடிகள் மேற்கு நோக்கி, ஓஹாயோ செல்ல ஆரம்பித்தார்கள். அங்கு, தங்கள் நிலத்தைச் செப்பனிடுவது, வீடு கட்டுவது மற்றும் பயிரிடுவது யாவும் அவரவர்களே செய்துக் கொள்ள வேண்டும்.



இந்த இடங்களில் ஆப்பிள் மரமே காணவில்லை என்பது ஜானியை மிகவும் பாதித்தது. இவர்கள், வசந்த காலங்களில் அழகான சிவப்பு ஆப்பிள்கள் முளைப்பதைப் பார்க்க முடிந்தால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும் என்று எண்ணினார். இலையுதிர் காலத்தில் ருசியான ஆப்பிள்களை இவர்கள் ரசித்து சாப்பிடுவதுடன் குளிர் காலத்தில் நிச்சயமாக இனிமையான ‘ஆப்பிள் பை’ என்னும் இனிப்புப் பண்டத்தை மிகவுமே ரசித்து சாப்பிடுவார்கள் என்பதும் தெரியும் அவர்களுக்கு எப்படியாவது தான் உதவ வேண்டும் என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார்.







ஒஹாயோவிற்குச் செல்லும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஆப்பிள் மரத்தை கொடுக்க விரும்பினார். ஆனால் இந்த முனோடிகளின் வண்டிகள் ஏற்கனவே அவர்களுக்குத் தேவையான சாமான்களால் நிரம்பியிருந்ததால் ஒரு ஆப்பிள் மரத்திற்கு யாருக்குமே வண்டியில் இடமில்லை.

ஜானிக்கு ஒரு நல்ல யோசனை உதித்தது. அவர்களுடன் எடுத்துச் செல்லகூடிய ஆப்பிள் விதைகளை கொடுக்க முடிவு செய்தார். எப்போது ஆப்பிள் சாப்பிட்டாலும் அதன் விதைகளை எடுத்து தோல் பையில் போட்டு, தனது பண்ணை வழியாக போகிறவர்களுக்குக் கொடுத்தார்.





ஆப்பிள் விதைகளை வாங்கிக் கொண்ட ஒவ்வொருவரும் தங்கள் நன்றியை தெரிவித்தார்கள். ஆனால், அந்த விதைகளை நடுவதற்கோ, முளைவிட்டதும் மரங்களை பராமரிப்பதற்கோ எவருக்கும் நேரம் கிடையாது.



“மான் தாவரங்களைத தேடி சாப்பிடுவதற்கு வரும்; ஆகவே, நீங்கள் விதைகளை நட்ட பிறகு அதை சுற்றி ஒரு சிறிய வேலி கட்ட வேண்டும்” என்ற ஜானி. “மரங்களுக்கு அருகில் களைகளை வளரவிடாமலும் பார்த்துக் கொள்ளவது அவசியம்”, என்றும் சொல்லி அனுப்பினார்.

ஒரு நாள் அவருக்கு ஒரு எண்ணம் தோன்றியது. “ஆபபிள் பழத்தோட்டங்களை முன்னோடிகளுக்குப் பயிரிடுவதற்கு நான் ஓஹாயோவிற்க்குச் செல்லப் போகிறேன்”, என தனது பெற்றோர்களிடம் கூறினார்.” அதை கேட்டு, “அங்கு நீ தனியாக இருக்கவேண்டுமே? தவிர, வீட்டு மனிதர்களும், சிநேகிதர்களும் இல்லாமல் ஏங்குவாய்”, என்று அவருடைய தந்தை சொன்னார்



நீ ஒன்றுமே யோசிக்காமல், காட்டுக்குள் தனியாகப் போகலாமா”, என கவலைப்பட்ட ஜானியின் தாய் . “அங்கு இருக்கும் காட்டு விலங்குகளைப் பற்றி யோசித்தாயா? பனிப்புயலில் சிக்கிக் கொண்டால் என்ன செய்வது? மேலும் எங்கே தூங்குவாய்’ என்று கேட்டார். “நான் ஆகாசத்தின் கீழ் தூங்குவேன்”, என்ற ஜானி. “யாருக்குமே வானத்தை விட சிறந்த கூரை கிடையாது” என்று பதிலளித்தார்..





ஜானியின் பெற்றோர்களுக்கு, அவர் என்ன சொன்னாலும், கவலையாகத்தான் இருந்தது; ஆனால், போவது என்று திடமாக அவர் இருப்பதும் புரிந்தது. ஜானி தன்னுடன் எடுத்துச் செல்ல வேண்டிய பையைத் தாயார் செய்ய உதவினார்கள்; மேலும், குளிரை எதிர்க்க அவருடைய அம்மா மேல் அங்கி ஒன்றை தானே தைத்துக் கொடுத்து, உணவை தாயார் செய்ய, தன்னிடமிருந்த ஒரு சிறந்த பாத்திரத்தையும் கொடுத்து அனுப்பினார்.



தான் போகும் வழியில் ஊரில் இருந்த ஆலை ஒன்றிற்குச் சென்றார். அங்கு நிறைய ஆப்பிள் பழச்சாறு செய்வதால், அவர்களிடம் ஆப்பிள் விதைகளைக் கேட்டதும், எவ்வளவு வேண்டுமானாலும் எடுத்துக்கச் சொன்னார்கள்.



உடனே ஜானி நிறைய ஆப்பிள் விதைகள அள்ளி எடுத்துக் கொண்டார். ஆனால், அவை அனைத்துக்கும் அவருடைய பையில் இடமில்லை. ஆகவே, பாத்திரத்தை வெளியில் எடுத்து, தனக்கு ஒரு நல்ல குல்லாய் கிடைத்தது என்று சொல்லி, தன் தலையில் மாட்டிக் கொணடார்.



பிரயாணம் கடினமாக இருந்தது. அவ்வளவு ஆப்பிள் விதைகளையும் தூக்கிக் கொண்டு, ஆயிர கணக்கான மைல்கள் நடந்தார்., ஒரு விவசாயி மரம் வெட்டுவதற்கோ, வேலி போடுவதற்கோ அவ்வப்போது நின்று கை கொடுப்பார். அவர் உதவிய குடும்பங்கள் பெரும்பாலும் தங்கள் வீட்டில் அவருக்கு இரவு உணவு கொடுப்பார்கள். வெகு சீக்கிரமே அனேக சிநேகிதர்கள் அவருக்குக் கிடைத்தார்கள்.



நஷத்திரங்களுக்குக் கீழே தூங்குவது ஜானிக்கு மிகவும் பிடித்த ஒன்று. காட்டில் மிருகங்களைப் பற்றி அவருடைய அம்மா கவலைப் பட்டிருக்க வேண்டாம். அந்த மிருகங்களும் ஜானியிடம் சிநேகத்துடன் இருந்தது. ஒரு சமயம் மோசமான பனிபுயலில், வெட்டப்பட்ட பெரிய மரதுண்டில், ஒரு பெரிய கரடியைக் கட்டிக் கொண்டு தூங்கினார்.



ஒரு வழியாக ஓஹாயோவை வந்தடைந்ததும், ஆப்பிள் விதைகளை முதலில் நதியின் கரையோரத்தில் நட்டார். விதைகளைப் பாதுகாக்க முட்கள் நிறைந்த புதர்களைப் பயன்படுத்தி வேலிகள் அமைக்கப்பட்டன

பிறகு, மற்றுமொரு இடத்திற்குப் போய் அங்கும் ஆப்பிள் விதைகளை நட்டார். தவிர, ஏற்கனவே வளர்ந்து கொண்டிருந்த துளிர் முளைகளைப் பராமரிக்க, திரும்பி, அந்த இடங்களுக்குப் போவது ஜானியின் வழக்கம்.



நாற்று சற்றே பெரியதாக வளர்ந்தவுடன் ஜானி அவற்றை தோண்டி எடுத்து, முன்னோடிகள் வீட்டில் கொண்டு கொடுத்ததால் ஆப்பிள் மரங்கள் அவர்கள் வீட்டிலேயே வளர தொடங்கின.





சில வருடங்களில், உங்கள் வீட்டு மரத்திலிருந்தே ஆப்பிள் பழங்களைப் பறித்துச் சாப்பிடலாம் என்று எல்லோரிடமும் ஜானி சொல்லுவார். வசந்த காலத்தில் அழகான இளம் சிவப்பு நிற ஆப்பிள் பழங்கள் உங்கள் மரங்களில் தொங்கும் காட்சியை விட அழகான ஒன்றை நீங்கள் பார்க்க முடியாது என்று மகிழ்ச்சியுடன் கூறுவார்.

ஓஹாயோ பள்ளத்தாக்கில்க அநேக வீடுகளுக்கு அவர் விதைகளை நடவெ, ஊர் மக்கள் "ஜானி ஆப்பிள்சீட்" என்று அழைக்கத் தொடங்கி விட்டார்கள். மரத்தின் அடிக் கட்டைகளை வெட்டுவது, சோளங்களை நடுவது, மற்றும் வீட்டிற்குத் தேவயான நாற்காலி, மேஜை போன்ற அறைகலன்களை அவரவர்கள் விருப்பப்படி செய்வது போன்று பல உதவிகளைச் செய்து கொடுத்தார்.



முன்னோடிகள், ஜானியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

இரவு உணவிற்குத் தயாரகுங்கள்” என்று சொல்லி, அம்மாக்கள “இன்று இரவு உணவிற்க்கு ஜானி ஆப்பில்சீட் வருகிறார்” என குழந்தைகளுக்கு அவரின் வருகையை அறிவிப்பார்கள்.

தன் வாழ்நாள் முழுவதும் யாவருக்கும் என்ன உதவி செய்ய முடியமோ அதை செய்து தன் முழு வாழ்க்கையையும் ஜானி ஆப்பில்சீட் கழித்தார். அவர் இறக்கும் முன்பே ஓஹாயோ பள்ளத்தாக்கில் ஆப்பிள் மரங்கள் பூத்து குலுங்கின. சிலருக்கு அவர் நினைவு இன்னும் வரும்.



முற்றும்